# திறவுகோல்

2054
மாசி
மாத இதழ்



வெளியீடு:
**மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.**

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# சிறுசேமிப்பு

அலுவலகத்தில் இருந்து
வீட்டிற்கு வந்த அப்பா
தன் எட்டு வயது மகன்
அன்புவை அழைத்துக்
கொண்டுப் பொங்கலுக்கு
துணிகள் வாங்க
ஜவுளிக்கடைக்குள்
சென்று தேவையான
துணிகள் வாங்கிவிட்டு
பில்போடும் இடத்தில்
பணத்திற்கு பதில்
தன் கையில் வைத்திருக்கும்
ஒரு அட்டையை எடுத்து
கொடுத்து பணம்
செலுத்திவிட்டு,
சிற்றுண்டி உணவு
முடித்தப் பின் அந்த
ஹோட்டலிலும் பணத்திற்குப்
பதில் கார்டையே
பயன்படுத்தியதும்,
பிறகு காருக்குப்
பெட்ரோல் நிரப்பும்
இடத்தில் கார்டைப்
பயன்படுத்தியதும்,
பிச்சையெடுக்கும்
அந்த பாட்டிக்கும்
காசுக் கொடுக்காமல்
அட்டை மூலமே பணம்
செலுத்தி உணவு
வாங்கிக் கொடுத்ததும்,
பணமே கையில் இல்லாமல் அப்பா
செலவு செய்கின்றாரே....
என ஆச்சரியமடைந்த
அன்புக்கு ஒரே சிந்தனை....

இன்று பள்ளியில்
ஆசிரியர் கூறிய
சிறுசேமிப்பிற்கு
அப்பா பணம் எப்படிக்
கொடுப்பார்.
அதுவும் உண்டியலில்
தினம் தினம் பணம்
சேர்ப்பது எப்படி?

எனக்கும் அட்டையையே
கொடுத்துவிடுவாரோ?

என்று யோசித்துக்
கொண்டிருந்த அன்பு,
தன் அப்பாவைப் பார்த்து,
அப்பா என் ஆசிரியர்
சொன்னது போல
நானும் சேமிக்க வேண்டும்.
அதற்கு நீங்க எனக்கு
காசுக் கொடுக்க வேண்டும்.
இந்த அட்டை எல்லாம் எனக்கு
வேண்டாம் எனக் கூறி,
மேலும் நீங்கள் உங்கள்
வருமானத்தில் செலவு
செய்ததுப் போக
மீதியை சேமிக்கின்றீர்களா?

அல்லது
சேமித்ததுப்போக
மீதியை செலவு
செய்கின்றீர்களா?

எனக் கேட்ட

அன்புவை பார்த்து
பேசுவதறியாது
தவித்தார் எண்ணிலக்க முறை
தந்தை பார்த்திபன்

—

எழுத்தாளர்,
மு. ஜெரோஷா.

---

# வறண்ட குளத்தின் மதகு.

மீண்டெழ வாய்ப்பற்ற ஆழத்தில்
வீழ்ந்திருக்கும் நான்
தொடர்ந்து முயல்கிறேன்
சிங்கத்தின் பற்களால்
நெஞ்சைப்பிளந்து
குருதி சுவைக்கிறது தோல்விகள்.

ஆற்றலின் இறுதிச்சொட்டும் தீர
பலவீனத்தின் மடியேறிச்
சோர்ந்து முடங்குகிறேன்
என் பரிதவிப்பைப்
பார்த்தும் பார்க்காமல் நகர்கிற
பருத்த பிம்பத்தின் பின்னால்
பலியாடாய் செல்கிறது
நான் பெரிதும் விசுவாசித்த ஒன்று.

பட்டினியால் இறுகிய வயிற்றைப்
புழுதியால் தினம் நிரப்புகிறேன்
வறண்ட கண்மாயின் மதகுகள்
நீந்திமகிழும் மீன்களை இரசித்தில்லை
இதுவரை.

நிறைந்தெழும் தீயின் அருகில்
சிறு துரும்பென நிற்றலை
விரும்பாத என்னை
வலிந்து பொசுக்குகிறது
பழகிய முகங்கள்.

மெல்லமெல்ல மூடிடும் மண்ணுக்குள்
விதையென புதைந்தாலும்
என் துளிர்த்தலை விரும்பாத
அசூரக் கரங்களில்
மூன்றாம்நாள் உயிர்த்தல்
பாவத்தின் சம்பளம்.

## இரவில் நிறையும் குளம்.

மௌனம் படர்ந்த இரவைப்
பெருமழைப் பொழிந்து
கலவரம் செய்கிறது
நிலவற்ற வானம்.

வாய்க்கிழிய கத்தும்
பச்சைத்தவளைகளின் இராகத்தோடே
மெல்ல நிரம்புகிறது
ஊரின் ஆதிக்குளம்

வறண்ட சேற்றில்
பரம்பரையை மிச்சம் வைத்திருக்கும்
தாமரைக் கிழங்குகள்
மலரைப்பாடி நறுமணத்தோடு
கண்விழிக்கிறது.

சிறுசிறு முட்டைகளை
வெடித்துச்சிதறி

குழம்பில் கொதிக்கும் வாசத்தோடு
மீன்குஞ்சுகளும் வாழ்வைத்
துவங்குகின்றன.

விழல்களின் வேருக்கடியில்
நீர்நத்தைகள் மகிழ்ந்து குலாவும் இசை
தண்ணீரின் மேற்பரப்பில்
சிறுசிறு குமிழ்களைத் துளிர்க்கின்றன.

குளக்கரை மரங்கள்
தன் நிழல்களை எறிந்து
கலங்கிய நீரில்
அடர்த்தியாய் கரியை அப்புகிறது.

சிலுசிலு காற்றில்
குமரியின் சுருண்ட கேசமாய்
திரண்டெழும் அலைகளில்
மின்மினிகள் மின்னலை வரைகின்றன
செழித்த நாணல்கள்
சோலைகளை அசைத்து
கைத்தட்டி மகிழ்கின்றன.

தலையை மட்டும் வெளிநீட்டி
இரைத்தேடி விரையும்
தண்ணீர்ப்பாம்பின் இதயத்தில்
நெடுநாள் பசித்துயர்
வனத்தீயாய் எரிகிறது.

வளையின் ஆழத்தில்
உயிர்ப்பிழைத்து மிச்சமுள்ள
வைரம்பாய்ந்த நண்டுகள்
தன்வலிய கொடுக்குகளோடு
குளவலம் வருகின்றன.

இவ்வளவு நேர்த்தியாய்
உயிர்த்தெழும் குளக்கரை
ஏலத்தில் சிக்கி
வாழ்வுக்கும் சாவுக்குமான
கலவரப் பூமியாதல்
நீங்களும் நானும் முன்னின்று
காண விரும்பாதவை.

## மையல்வான்

உன்னிடம் உரையாடும்
மெல்லின மாயத்தருணம்
என் அறைமுழுதும்
பூக்களின் நறுமணம்.

என் மௌன இரவைக்
காதலால் பெருகி
நோய்செய்வதும்
தேன் கலந்த இதழ்நிரவி
நோய் கொய்வதும்
இயல்பான வாடிக்கை
உனக்கு.

என் இரவுகளைத் திருடிக்கொண்டு
உறங்கச்செல்லும் உன்னை
என் கனவுகளால்
மொத்தம் படர்ந்து
அரவென தழுவப் பணிக்கிறாய்.

உன்னிடமிருந்து
சிறு செய்தியோ அழைப்போ
வரமென வாய்க்காத நாட்களை
வற்றிய ஆற்றின் தலைக்குமேல்
இரைத்தேடி வட்டமிடும்
அயல்தேசப் பறவைகளின்
பசித்த வயிறாய்
சிரமத்துடன் கடத்துகிறேன்.

என் விரல்களில் வழியும்

அறிவின் சாற்றினை
விலையுயர்ந்த மதுவென
பருகிக்கொண்டிருக்கிறது
ஒளிரும் புன்னகையுடன்
அலுவல் மேசை கணினி
கரையைமோதி ஆர்ப்பரிக்கும்
பெருங்கடலின் சினமோடு
மலர்வனம் பொசுக்கிக் காத்திருந்தாய்
நெடுநாள் அவ்விடம் நீ
விசைப்பலகையின் பொத்தான்கள்
தேள்களின் கொடுக்கால்
நஞ்சேற்றுகின்றன
விலகாமல் இன்னும்
குளிரூட்டப்பட்ட அதிநவீன
நரக அறையின் கதவு
இனி எப்போதும் திறக்க வாய்ப்பில்லை
கனவிலும் விடியாது
நீயொளிரும் மையல்வான்.

## அதிகார நாக்கின் தழல்

சனிக்கிழமைகளின் இடிபாடுகளில்
சிக்கித் தவிக்கும்
ஞாயிற்றுக்கிழமைகளை மீட்க
விரைகிற கூட்டத்தில்
விருப்பமுடன் இணைதலில்
பெரும்மகிழ்ச்சி எனக்கு.

வழியெங்கும் அணிவகுக்கும்
எதிர்பார்ப்புகளின் புழுதி
பருவம் தவறிய மழையின்
வெள்ளம்போல் கால்களில் திரள்கிறது.

அறைகளை மூடி விலகிய பின்னும்
நினைவுகளில் மிச்சமிருக்கும்
பழைய காதலியின் முத்தங்களாய்
மேசைமீதுள்ள கோப்புகள்
இரகசியமாய் பின்தொடர்கின்றன.

விரைந்து முடிக்க அழைக்கும்
அதிகார நாக்கின் தழல்
கடற்கரை சாலையின் பேரலைகளில்
இராவணனின் சிம்மக்குரலால்
கர்ஜிசிக்கிறது.

கற்பகிரகத்தின் நுழைவாயிலில்
பூஜைமணியின் ஒலியால் பதறுகிறது.

மருத்துவமனையின் அவசரப்பிரிவில்
அலரல் ஒலங்களால் நடுங்கவைக்கிறது.

அடம்பிடிக்கும் குழந்தையின்
அழுகை சப்தத்தால்
செவியை மைதாவாய் பிசைகிறது.

எவ்வளவு ஜாக்கிரதையாய் முயன்றும்
உயிருடன் மீட்க இயலவில்லை
உருக்குலைந்த சடலமாய்
வீதியில் கிடக்கின்றன
ஞாயிற்றுக்கிழமைகள் மொத்தமும்.

அதன் இறுதி ஊர்வலத்தின்
பெருகும் கண்ணீரை வெளியிடாமல்
வரிசையில் நிற்கிறேன்
திங்கட் கிழமையின் பூட்டுகள்
நடுங்கும் உடலோடு தாழ்திறக்கிறது.



—
பொன்.தெய்வா,
ஐவேலி.
விழுப்புரம் மாவட்டம்.

# நான் மரம் மாதிரி

என் நிழலில் நான் மட்டுமே
இளைப்பாறுவதில்லை.

/

மழைக்காகத் தவமிருக்கும் மண்
எல்லோருக்குமாகப் பொழிகிறது
வானம்.

/

உன்னைக் கொண்டாடும்போது
என்னையும் சேர்த்து
கொண்டாடிக் கொள்கிறேன்.

/

தீபம் அடங்கி விளக்கணையும்
தருணம்
ஈசல் அவசரப்பட்டதில் நிகழ்ந்தது
திடீர் மரணம்.

/

குழந்தைக் கைகளால் அள்ள
எட்டியது எட்டாக்கனி
வாளி நீரில் நிலா.

/

இருப்பதற்காக வந்தோம்
போகும் வரை இன்பமாய்
இருந்துவிட்டுப் போவோம்.

/

இருக்கும் போது
அனைவரையும் சேர்த்தணை
போக வேண்டும் நாலுபேர்.

/

உன் காந்தபார்வை காதலோடும்
பேரழகு உன்னோடும் காலமெல்லாம்
வாழ அழைக்கிறது என்னை.

/

தன்னை கேட்டழும்
குழந்தைக்காக பெட்டிக்குள்ளேயே
கரைகிறது குச்சிஐஸ்.

/

நதியும் வெள்ளமும் மாறிமாறி
முத்தமிட்டுக் கொள்ளும் சப்தம்
சலசலப்பு.

/

விழுகின்ற அருவிக்கு
உயிர்தாகம்.
ஒவ்வொரு நீர்க்குமிழிகளையும்
உடைத்துப் பருகி
ஆனந்தமாய் துள்ளியோடும்
ஆறாய்.

/

றெக்கைவிரித்து
பறவைகள் பறக்கும் தருணம்
எல்லையின்றி விரிகிறது வானம்.

/

பனிபொழியும் அதிகாலை
அவள் வாசலைக் கூட்டியதும்,

நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும்
புள்ளிகளாய்த் தரையிறங்கின
ஓர் அழகிய கோலத்திற்கு
தயாராகிறது வாசல்.

/

### இன்னும்

கொஞ்சநேரமிருந்து
சிரித்து விட்டுப்போயேன்.
உன் முத்துப் பல்லழகில்
இரவு நேர மின்மினிகள்
மின்னப் பழகனுமாம்.

/

### மௌனத்தின் அர்த்தத்தை

காற்று மலரின் மொட்டுடைப்பது
போலேனும் சொல்லிடு என்னிடத்தில்.

/

### மகளின் கன்னம் வருடிய தென்றல்

இம்மலரையும் வருடியிருக்கும் போல;
வெட்கத்தில் சிவந்திருக்கிறது மலர்.

/

### பார்வையை இரையாய் வீச

நான் பறவையாய்
உன் வலையில் விழுகிறேன்.

/

### சருகுகளே...

தாராளமாகத் தரையிறங்குங்கள்.
சற்று முன்னர்தான்
தூறல் விழுந்தது மண்ணில்.

/

### தூக்கம் வராத

இரவு விடிய விடிய
விழித்துக் கொண்டிருந்தது.

/

### இன்னமும் அகப்படவில்லை

உனக்கான கவிதையில்
எனக்கான காதல்...!

/

### படுக்கையில் உறக்கமின்றி

புரளும் எனக்கு ஓயாத
அவளின் ஞாபகம்.

/

### பழைய செடியில்

நித்தம் ஒரு பூ
புத்தம்புது வாசம்.

/

### உன் நகங்களுக்கு

வலிக்குமென்றே
நான் பூக்கள் பறிப்பதில்லை.

/

### மீசையில் ஒற்றை நரைமுடி

இளமை உதிர
துளிர்க்கிறது முதுமை.

/

காற்று சீண்டுகிறது
மலர் சிணுங்குகிறது
வண்டு தேனெடுக்கிறது.

/
பகலைப் பாதியாக்கி
இரவை இரண்டாக்கி
என்னைப் பைத்தியமாக்கி
அவள் நினைப்பால் கொல்லுகிறாள்.

/
கோப்பையிலிருக்கும் தேநீரை
சுடச்சுட சுவைத்துப் பருகுகிறாய்.
உன் இதழ் வழி அமுதத்தை
இனிக்க இனிக்கப் பருகுகிறது
"கோப்பை"

/
நீயுன் அப்பாவின் சாயல்
என் கவிதைகளில்
உன் சாயல்.

/
என் அழுகையைப் பாசமென்று
சொல்லாமல் போனாலும்
பரவாயில்லை.
வேசமென்று மட்டும்
முத்திரை குத்தி விடாதீர்கள்.

—

கவிதைகள் ஆக்கம்
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602.
கைப்பேசி: 9443139353



---

# வள்ளுவன்

முப்பால் தந்த
முடிசூடா மன்னா....!
நான்காம் பால் எழுதவே
நிற்கிறாயோ குமரிக்கடலில்....?

அதிகாரங்களில் பேசினாய்
உம் எழுத்தாணிகள் மட்டும்
எகிறிக்குதித்து சிரிக்கிறதே...!

ஈரடிகளில் எழுதினாய்
இப்பொழுது நாங்கள்
எழுதும் அடிகளிளெல்லாம்
மேற்கோளாகிறாய் நீ....!

சுவையாய் பாலூட்டினாய்
இன்னமும் அருந்தி கொண்டு
தான் இருக்கிறார்கள்
மழலையர்கள் முப்பாலை...!

அதிகாரம் பேசாமல்
அதிகாரங்களில் பேசுவதால்
அயல்மொழிகளிலும் நின்று
அழகுசேர்க்கிறாய்...!

உமக்கு மட்டும்
எப்படி இவ்வளவு துணிவு
ஈரடிகளில் எழுதுவதற்கு..!
எமக்கும் கற்றுத் தரலாமே...?

நாங்கள் ஓரடியில் எழுத
துவங்குபோதெல்லாம்
ஈரடிதான் நிற்கிறது
உதாரணமாய்...!

உம் எழுத்தாணி
விண்ணைத் தொட்டதால்
விண்ணிலும் எழுதுகிறாயோ?
அதை கொஞ்சம் தூவலாமே
மண்ணிலும்....!

வணங்காமுடியாய்
வணங்கி எழுதினாய்
கடவுள் வாழ்த்தை.. !
வணங்கி சொல்கிறது
உன் முதல் வாழ்த்து...!

எழுத்தாணியில் நீ
ஊட்டிய பாலை
அருந்தியவன் எழுதுகிறான்
மூன்றடியில் ஹைக்கூ பாலை...!.

உன் முகம் காட்டிய
வெண்தாடியில்
பொதிந்திருப்பது

இன்னும் எத்தனை
குறட்பாக்களோ?...!

குரலசைவில்
மனனம் செய்கிறார்கள்
மழலையர் முதல் மங்கையர்கள்வரை
குறட்பாக்களை...!

எம்மொழிகளும்
எழுந்து வணங்குகிறதே
எம் முப்பால் தந்த
சுவையை சொல்லி
மகிழ்கிறதே...!

நிமிர்ந்து சொல்வோம்
ஈரடி பாக்களை
உயர்ந்து நிற்போம்...
வள்ளுவனின் வழியில்...!

—

ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

# ஏனோ தவழுகிறது நிரவல்

எதுவெனவோ விரிகிறது
எதுவெனவோ சேர்கிறது
நகர்ந்து நடந்து ஓடி
நிற்கிறது புள்ளி
இருண்மையின் விசையென்று
எதைச் சொல்ல
ஏனோ தவழுகிறது நிரவல்
சொல் பூண்டு
புனைவுக்குறிப்பென
புல் சரியும் மாயங்களை
என்னதான் செய்ய
பிதற்று மொழி உருவும்
பின் மயக்கத் தகவமைப்பை
நீள் பகர்வென பார்க்கலாம் மீட்சி
பிறிதெப்போதாவது
நிறம் பிரியும் ஒவ்வாமை
சுடரை ஊதி அணைக்க
தெரிவதேயில்லை
கனவை சொட்டும்
கசப்பு ஒற்றையடிகளை
கனத்து நிற்கும் பாதங்கள்
தவற விடுதல் முறையே
வந்து உடைக்கும்
கல் ஒன்றில் வந்ததும்
உடையும் காட்சிப்பிழை
சிந்துமா சிதறுமா
சட்டென்று நின்று விடும்
கற்பனை சிறகுகளை
அடுத்தடுத்தப் பக்கங்களை
தவிர்த்தலில் புரிகிறேன்
நலம் கெட புழுதியில்
எறிய ஏதுவாய்
யாராவது திறம்படத் தேடலாம்
யானையென இருப்பதை விட
சற்று சாத்தியப்படுகிறது
காடென தொலைதல்.....!

## ஆகட்டுமென்ற படிம சத்தங்கள்

வெற்றிடம் அடைக்க நிறைகிறது
தன்னிடம் இருக்க பிரிகிறது

வந்து போனவைகள்
தடத்தின் தடங்கள்

சிறு குறிப்பு சூழலுக்குள்
சிந்திய காலச்சிக்கல்

சுற்றுதல் பின்னுதல் பின்
தானே விடுவித்தல்

எட்டிப் பார்க்க புரிதல்
அப்படியே விடுபடுதல்

தூரத்தின் வாழ்வுதனில்
சூட்சுமக் காரியங்கள்

பிறர் தேடும் எதிர்மறை நிறையென
நேர்நின்று அழிதல் வெற்றிடம்

அடைக்க வந்த நிறையின் நிறை
ஆகட்டுமென்ற படிம சத்தங்கள்

ஓடித் திரிந்து படக்கென்று
பறந்து உயர்ந்து புள்ளிக்குள்
இல்லாமலே போகலாம்
சற்று தூரங்கள்...!

## கால் நனைத்த என் செல்பி

எதிர்ப்படும் அலைக்கற்றை
எதுகை மோனை
இருந்தும் ஒதுங்குகிறேன்

திறம் வியந்த திமிரெல்லாம்
தீ பிடித்து எரிகிறது
ஜுவாலை குளிரூட்டும்

நிகழ்வதெல்லாம் நிகழ்வென்றே
நம்புவேனா
நீல ஒளியில் என்னுயிர் இருக்கட்டுமே

நித்திரைக்கு முன்னும் பின்னும்
நீலவண்ண நிறப்பிரிகை
நீள்வட்ட கனவை கொத்தும்
என் தூக்கம்

இனியொரு காதலும் முத்தமும்
என்பொருட்டு சிலிர்க்கும்
யாவுமற்று தீர்ந்து விட்டேன்
தேக்கமற்ற தேன் மனம் எனது

தெள்ளிய நினைவோடை
மீன்பிடிக்கிறேன் கால்நனைக்கிறேன்
செல்பி எடுக்கிறேன்

இருப்பதில் எல்லாம் நானே
இன்னமும் இருக்கலாம் நானும்

—

*கவிஜி.*



**மா. நிரல்யா,**
**சிங்கப்பூர்.**

# பாராசூட் நம்பிக்கை....!

ஒவ்வொரு மனிதனும் தான் வெற்றி பெறவே முயற்சி செய்கிறான். ஆனாலும் எல்லோரும் வெற்றிக்கனியை பறிப்பதில்லை. இதற்கு மிக முக்கிய காரணம் தான் வெற்றி பெறுவேன் எனும் நம்பிக்கை இல்லாததுதான். ஒரு மனிதன் தன் முயற்சியில், செயலில் எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளான் என்பதை பொறுத்தே அவன் வெற்றியின் அளவு இருக்கும்.

விமானத்தில் பாராசூட்டினை கட்டிவிட்ட பிறகு ஒருவரை விமானத்திலிருந்து குதிக்க சொல்கிறார் பயிற்சியாளர். "இந்த பாராசூட் விரியாவிட்டால் என் நிலமை என்ன ஆவது?" என குதிக்க இருப்பவர் பயிற்சியாளரை பார்த்து கேட்க,அதற்கு பயிற்சியாளர்" எனக்கு மனைவியும் இரண்டு குழந்தைகளும் உள்ளனர்.

உங்கள் பாராசூட் வேலை செய்யவில்லை எனில் நானும் கீழே உங்களோடு குதித்து விடுவேன் , நம்பிக்கையுடன் குதியுங்கள்" என்கிறார். அந்த நபர் நம்பிக்கையுடன் குதிக்க பாராசூட் விரிந்து தரையில் பாதுகாப்பாக இருங்குகிறார்.

நன்றி சொன்னவாறே பயிற்சியாளரிடம் கேட்கிறார் " நீங்கள் பாராசூட் கட்டிவிடுவது இது எத்தனையாவது தடவை". அதற்கு பயிற்சியாளர்" முதல் தடவை" என்று கூறுகிறார்." அப்படி எனில் எப்படி அது சரியாக வேலை செய்யும் என்று கூறினீர்கள்" என்று அந்த நபர் கேட்க.

அதற்கு பயிற்சியாளர் "நான் உங்களுக்கு பாராசூட் மட்டும் கட்டவில்லை அதனோடு எனது நம்பிக்கையையும், அன்பையும் சேர்த்தே கட்டினேன், அது ஒருபோதும் தோற்காது".

இந்த நம்பிக்கையே வெற்றி. மேலும் நாம் பாதுகாப்பாய் வெற்றி இலக்கில் இறங்க நிறைய பேர் நம்பிக்கை பாராசூட்டை உங்களுக்கு அளித்துள்ளனர்.

அதன் மீதும் உங்கள் செயல்பாடுகள் மீதும் நம்பிக்கை வையுங்கள். வெற்றி சாத்தியமாகும்.

—

முனைவர். சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர் மற்றும் உளவியல் ஆலோசகர்.
மன்னார்குடி.



# சமிக்ஞையில் கரையும் நொடிகள்

மஞ்சள் மாறும் நொடிப்பொழுதில்
பேய் வேகத்தில்
சிக்னலைத் தாண்ட நினைப்பதற்குள்
சிவப்பு அபாயக்குறியீடு
எச்சரிக்க எரிச்சலோடு நிறுத்தி
ஆக்சிலேட்டரை முறுக்கி
பெருமூச்சுவிடும் வேளையில்
குழந்தையுடன் பிச்சையெடுக்கும்
இளம்பெண் கழிவிரக்கத்தையும்
எதிரில் நிற்கும் ஆடிக்கார்
பொறாமையும்
காற்று இடைவெளியின்றி
பிசினாயிருக்கும்
ஈருருளியிணை ஏக்கப்பெருமூச்சையும்
பின்னாலிருந்து வரும் ஹாரன் சத்தம்
எரிச்சலமிலத்தையும்
ஒருங்கே உண்டாக்குகின்றன.

பச்சை விழுந்ததும்
அத்தனையும்
நொடிப்பொழுதில் கரைய
அலுவலகம் செல்லும்
அவசரத்தில்
மீண்டும்
அசுர வேகப் பேயாகிறேன்.

## ஆளுமை

கூர் சீவிய கொம்புகளோடு
குத்திக் கிழிக்க
திமிறிக் கொண்டு
வா(டி)(ய்)வாசலில்
பாய்ந்து வருகின்றன
வீரியமிகு சொற்காளைகள்
காளைகளை அடக்கி
ஆள்பவர்கள்
ஆள்கிறார்கள்
மனங்களை

## அகன்ற விழியில் அகலாத பிம்பம்

பெண்பார்க்கும் படலத்தில்
கதவோரம் எட்டிப்பார்த்த
என் நீள்விழியில்
விழுந்ததாகக் கூறிய நீ
முதலிரவு தாண்டிய
பகலில் கூட எழவில்லை.

எல்லைக்காவல்
இராணுவப்பணிக்கு
செல்லும்முன்
அவசரமாக நீ கொடுத்த
மருத்துவமுத்தத்தை
அசை போடுகையில்
என்னிதழை வட்டமடித்து
பாலைநிலத்தை
பதப்படுத்துகிறது
பாழும்நா.

நீயகன்ற நாள் முதல்
அகன்ற விழியில்
அகலாத பிம்பத்தோடு
உன் வரவை

எதிர்பார்த்துக்
காத்துக்கொண்டிருக்க....

நீயோ தேசியக்கொடியை
போர்த்தியவாறு
ஊர்வலமாக வருகிறாய்
சவப்பெட்டியில்

—

பா. சிவகுமார்.

---

# கிராமத்து கீதம்

மயக்கும் மான்விழியே
மாமனின் காதலியே•••

பார்க்கும் பார்வையில்
ஏக்கம் கூடுதே•••

நேசம் தந்து
நெஞ்சில் நிற்க்கிறாய்•••

கண் அசைவில்
காதலிசம் செய்கிறாய்•••

களத்து மேட்டில்
கட்டி யணைத்தவளே•••

கட்டுகடங்காத காளை
மனதை கட்டிப்போட்டவளே•••

சலசலப்பு வேணாமடி
கண்ண கதகதப்ப தாடி•••

முத்தம் நூறுதாடி
மொத்தவுசுரும் உனக்குதாண்டி•••

இடைவெளி வேணாண்டி
இடுப்ப கொஞ்சந்தாடி•••

மஞ்சதாலி வெச்சிருக்கேன்
மாமன் பேச்சை கேளடி•••

மார்கழி முடிஞ்சதும்
கல்யாணம் தாண்டி•••

மனசுல எப்பவுமே
நீயே தாண்டி ....!

—

ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்.

# காதலின் அகராதி

துள்ளியோடி வரும் வெள்ளி வண்ண அலைகளோ
சிரித்துக்கொண்டே ஓடிவந்தேறிக் கொள்ளும் குழந்தையின் தழுவலோ
- காதலின் தீண்டல்.

இரவுப்பகல் பாராது ஓடும் காலத்தின் எதிரியோ
மணிக்கணக்காய் தீராது அட்சயமாய்ப் பெருகிவரும் வார்த்தைகளோ -
காதலின் இயக்கம்.

சில்லென்று ஆயிரம் அருவி கொட்டும் அடைமழையோ
ஆழ்க்கடலின் அடியில் கிடைக்கும் அரும்பெரும் மனமைதியோ -
காதலின் சுகம்.

முதிர்ந்த முல்லொன்று தைத்து விட்டு போகும் பெரும்வலியோ
இதயம் மூட்டைச்சுமக்கும் பாரம் கொண்ட நெஞ்சமோ - காதலின்
வலி.

கனவாய் கானல் நீராய் கலையாமல் இருந்தாலே!

மெய்க் காதலர்களுக்கு வாழ்க்கை
ஓரம் வரை
நெடுதூரம் கைக்கோர்த்து செல்ல பெரும் துணை - இந்தக் காதல்.

—

இரா. ரம்ய பாரதி,
புதுச்சேரி.

# தேன்மொழி

# விண்மீன் காதலி...

அடமழைக் காலம்
ஓட்டை விழுந்த கூறை வீடு
மோட்டுவல ஒழுகுதுனு
அப்பா படுதா போட்டு முடிவச்சாரு
படுக்கும் போது அன்னாந்து பாத்த தேன்மொழி பரிதாபமா கேட்டா
அப்பா நட்சதிரம்லாம் இப்போ எங்க போய் தூங்கும்னு...

தேன்மொழி 4 வது படிக்கும் விளையாட்டு குழந்தை அவள் தினமும் கீத்து ஓட்டைகளில் தெரியும் நட்சதிரங்களை எண்ணுகிறாள்...

தன் வீட்டு கூறையில்தான் அவை தூங்குகிறது என்று நினைத்து கொள்கிறாள். தினமும் இதனை சொல்லி
தன் தோழிகளிடம் சிலாகித்து கொள்கிறாள்.

தன் வீட்டுக்கு வருபவர்களிடம் ஆசையாக கூறி பெருமைகொள்கிறாள்...

ஆனால் அவளை எல்லோரும் வேடிக்கையாக பார்க்கிறார்கள்...
தலையை தடவி விட்டு சிறு புன்னகையுடன் கடந்து விடுகிறார்கள்.

அவள் அப்போதுதான் உணர்ந்து கொள்கிறாள் இங்கு எல்லோரும் நட்சதிரங்களை பார்ப்பதில்லை எல்லோரும் இரவில் அலையும்
நிலவை ரசிப்பதில்லையென்று.

இவற்றை ரசிக்காமல் இவர்கள்
அப்படி என்ன செய்கிறார்கள் என அவர்களை வேடிக்கையாக பார்த்தாள்.

மோட்டுவலையை அடைத்த அன்று
இரவு சோகத்தில் படுக்கையில் கிடந்தவள் கதவை திறந்து வாசலில் வந்து நின்றாள்.

அன்னாந்து வானத்தை பார்த்தவள் பார்த்தபடியே நின்றாள்.
நட்சதிரங்களின் பிரதிபலிப்பு அவளின் கண்களில் ஒளிவீசியது

எத்தனை ஆயிரம் நட்சதிரங்கள்... என
வாய் பிளந்து நின்றாள்.
அத்தனையும் வீடில்லாமல் சுற்றித்
திரிகிறதோ.....

நிலவுதான் இத்தனை ஆயிரம்
நட்சதிரங்களை பிரசவிக்கிதோ
என்று தனது எண்ணங்களை
அன்னிசையாக புழம்பி
கொண்டிருந்தாள்...
அப்பாவிடம் சொல்லி நாளை இரவு
அடம் பிடித்தாவது நிலவுக்கு போய்விட
வேண்டும் என்று மனதை சமாதானம்
செய்துகொண்டு
பானையில் இருந்த தண்ணீரை
குடித்துவிட்டு
உறங்க சென்றாள்.

தேன்மொழி இன்று விளையாட்டு
குழந்தையாக இருக்கலாம் அனால்
அவளின் குழந்தை மனம்
நட்சதிரங்களுக்கும் வீடு கொடுக்கிறது.
வானத்தின் மீது ஈர்ப்பு கொள்கிறது.

நிலவுக்கு தாய் வேடம் பூட்டுகிறது
அவள் சுதந்திரமாக விசாலமாக
சிந்திக்க தொடங்குகிறாள்...

என்றோ ஒரு நாள் தேன்மொழியின்
குழந்தைதனமான இந்த எண்ணத்தின்
நீட்சி இந்த ஒட்டு மொத்த பிரபஞ்சதின்
மீதான சரியான புரிதலில் வந்து
நிற்கும்... அவள் அண்டம் விட்டு
அண்டம் செல்வாள். செவ்வாய்க்கு
சுற்றுலா செல்வாள்... உச்சக்கட்ட
அறிவியல் வளர்ச்சியின் பாதையில்
இவளும் பயணம் செய்வாள்.

இந்த ஆசையையும் இந்த இயற்கையான
சிந்தனையையும் நெறிபடுத்தவும்
அறிவாக்கம் செய்யவும் அவளின்
பள்ளிக்கூடம் துணை நிற்கும்.

தேன்மொழி நட்சத்திரத்திடம் காதல்
கொண்டது போல் எல்லா
குழந்தைகளும் இங்கு ஏதோ ஒன்றின் மீது
ஈர்ப்பு கொள்கிறார்கள் அவற்றை
பள்ளியும் பெற்றோரும்தான் புரிந்து
கொள்ள வேண்டும்... வளர்த்து விடவும்
வெண்டும்.

குழந்தகளை கொண்டாட வேண்டும்
அவர்களின் எண்ணங்களை
விசாலமாக்க வேண்டும்.

—

பாலாஜி நாகராஜன்,
மன்னார்குடி.



# நெகிழி பூக்கள்

மேசையை அலங்கரிப்பது நெகிழி பூக்களென அறிந்தும் இரசனை மாறாது தொடர்ந்திட நொடிகளை கடந்து இருக்கிறாயா?

அலுவலகத் தொட்டிச் செடிகளில் நான் வீட்டில் விரும்பி நட்டு வைத்த மாதுளை, கொய்யா என ஒட்டுமொத்த சேகரத்தின் சாயல்...

கனன்று நிற்கும் மனம் ஒருசில நிமிடங்களை எதோடு ஒப்பிடுவதென்றறியாது அமிழ்ந்து போகிறது ஆசுவாசத்தை கையளிக்கும் மரங்களையும், மனிதர்களையும் எண்ணி!

- சரண்யா ரவி,
கோவை.

---

# அம்மா என்று

எழுதிய சந்தோசத்தில்
அழகாய்ச் சிரித்தது
குழந்தை
அனாதைப் பள்ளியில்

பூப்பறிக்கும் குழந்தையின்
இமைகளை கண் சிமிட்டாமல்
பார்க்கிறது பட்டாம்பூச்சி.

இரவுக்காட்சி வரைந்த
குழந்தை நிலவுக்காக
பாலைக் கொட்டியிருந்தது.

உறங்கும் குழந்தையின்
அழகை விடியும் வரை
உறங்காமல் ரசித்துப்
பார்த்துக் கொண்டிருந்தது
பொம்மை.

—

ஆனந்தன்,
திருப்பூர்.



# பூவே ....! பூவே ....!

எத்தனை நிறமானாலும்
மதம் பற்றி எரியாத
சுவாசங்களல்லவா
மணங்களை மட்டுமே வீசும்
மலர்களே... !

அள்ளியள்ளித்தான்
குடிக்கின்றாய் துள்ளிக்குதித்து
வீசுகின்றாய்
மனங்கள் சூடி மகிழும்
மணங்களை.. !

பூவே... !
மனிதன் அள்ளியள்ளி
பூசிக்கொள்கிறான் ஆறாய்
பெருக்கெடுத்து ஓடும்
உன்னை... !

பெயரிட்டு அழைக்கும்போது
முகமலர்ந்து சிரிக்கின்றாய்
மல்லிகையாய் ... !
மங்கையர் கைகளில்
தவழும்போதெல்லாம்
மழலையாகிறாய்... !

உன்றன் முகங்களில்
பனித்துளியாய்
வெள்ளைப்பருக்கள்
வந்தமர்கின்றன...
நீயும் காதலில்
விழுந்து விட்டாயோ ?

உனக்கான வேலிகள்
முட்கள் பூக்கின்றன... !
மனிதனுக்குள் வேலி
எப்போது பூக்கின்றன.. ?

நீ சிரிக்கும்
ஒவ்வொரு கணமும்
பாவையரின்கூந்தல்
பொலிவாகின்றனவே... !

புன்னகைத்து உனை சூடும்
பாவையர்கள் முகம் சுழித்து
விட்டெறிகிறார்கள் நீ
முகம் வாடிய பொழுதில்... !

மந்திர பூஜையில்
இந்திரனாய் அர்ச்சிக்கப்படுகிறாய்... !
மனங்களை இணைக்க
உனையல்லவா கட்டி
இழுக்கிறார்கள் மாலையாக.. !

மணங்களை வீசும் நீ
இரவில் கள் இறக்கும்
போதையாய் மாறுகிறாய்
மனங்களை இணைக்க... !

மங்கலங்களை சூடவே
மலர்களை சூடுகிறார்கள்
மங்கையர்கள் விரும்பும்
மணம் கொண்ட உன்னை... !

நாட்கள் நகர்ந்தாலும்
உன் சுவாசங்களை
நுகர்ந்தே நகர்கிறார்கள்
நீ வாழும் தேசத்தில்
நேசங்களாய்.... !

பூக்களும் பேசுகின்றன
விலை பேசிவிட்டு
வாங்காமல் செல்லாதே
பூக்கடைகளும் பூக்கட்டுமே
வாழ்க்கை கொடு... !

—

மலர்ச்சியோடு,
ஞா. முனிராஜ்.

வாசலில்
முடங்கியிருக்கும்
அம்மிக்கல்லில்
ஒட்டியிருக்கிறது
பாட்டியின் முகச்சாயல்!
***

எறும்புகளை
பெருக்கித் தள்ளியதும்
கோவில் வாசலில்
கோலமாகிறது கரும்பு.
***

வியாபாரியின்
வயிற்றைத்தான் உண்கின்றன
ஊதப்படும் பலூன்கள்.

—

ரகுநாத் வ,
மதுரை.

## வனம் காப்போம்

சுயத்தின் மூலம் ஊர்வலத்தில் உலாவுகிறது..
எளிதாக வெட்டப்பட்ட வனத்தின் உயிர்...



—

வாழ்வியல் கவி,
சா. நாகூர் பிச்சை,
திண்டுக்கல்.

# ஆறாம் விரல்

ஆறாம் விரல் பீடத்தில் இன்று ஆள்காட்டிவிரல்
மனிதம் தின்னும் இருளைக் கூராய் கிழிக்காமல்
தொட்டுத் தடவிக் கொடுத்தபடி நகர்த்தும் பிழைப்பு
மானுடம்பாடிகள் முழங்கும் பாடல்கள் பேரிரைச்சலில் மரிக்கின்றன
பசுமை நிலமெங்கும் ஆட்கொல்லிக் காவிப் பூஞ்சைகள்
வில்லென வளைக்கப்படும் நீதியிலிருந்து அநீதி அம்புகள்
விளிம்புகளை வீழ்த்திய கொக்கரிப்பில்
கூத்தாடும் அவலம்
எல்லா வீடுகளிலும் பற்றியெரிகின்றன
ஏமாந்த வயிறுகள்
ஒற்றை அடையாளம் ஓங்கி ஓங்கி அறையப்பட்டாலும்
சிலுவை மரத்திலிருந்து துளிர்க்கும் பன்மைத்துவ உயிர்
துல்லிய தாக்குதல் இந்தமுறை அந்நியசக்திகள் மீதல்ல
மீட்பரைத் தேடியலையும் அப்பாவிக் குடிமக்கள் மீது
நாடே கனவு காண்கிறது பேரிடரிலிருந்து மீள
நாசப்படுத்தப்பட்ட கந்தலான பூமியில்
பொத்தலான மழைவானம்
விசிலடித்தபடி கழியும் வெந்து தணியும் வாழ்க்கை
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மதிப்புமிகு நாழிகையும்
கசக்கி எறியப்படும் ஒன்றுமறியாப் பிஞ்சுப் பூக்கள்
அணு அணுவாய் செத்து மடியும் காதல்
தாமரையில் இரு ஒட்டாத நீர்த் துளிகள்
விலைபோகாத சருகுகள் மருகியபடி
நடைபிணங்களாய் ஒதுக்குப்புறங்களில்
ஈரமற்ற உள்ளங்களால் இடம்பெயர்ந்து
உயிர்த்திருக்கும் சாபக்கேடு
இதுவும் கடந்து போகுமென உறவற்றுக் கிடந்தாலும்
புவியீர்ப்பு விசைக்கெதிராய் எப்போதும்
கூவியழைக்கும் என் ஆறாவிரல்.

—

மணி கணேசன்,
மன்னார்குடி.



# விபத்து நடந்த இடத்தை

எவ்வித
சலனமுமில்லாமல் கடக்கிறோம்...
எனக்கென்னயென,

பசியோடு தவிப்பவர்களை
கண்டும் காணாதது போல்
கடக்கிறோம் ...எனக்கென்னயென,

வழிமாறித் தவிக்கும் குழந்தையைப் பற்றி
கவலையேதுமில்லாமல் கடக்கிறோம்...
எனக்கென்னயென,

உதவி கேட்டு
கையேந்துபவர்களை
உதாசினப்படுத்திக் கடக்கிறோம்...
எனக்கென்னயென,

தவறுகள்
நடக்குமிடங்களிலெல்லாம்
மௌனமாய் கடக்கிறோம்...
எனக்கென்னயென,

எனக்கென்ன எனக்கென்னயென
வாழ்ந்து பழக்கப்பட்டு விட்ட நம்மை,
துயரத்தோடு பார்க்கிறது...
நமக்கென படைக்கப்பட்ட உலகம்!

—

மு. முபாரக்,
திருச்சி.

# பசித்த மானுடம்

விடிய விடிய மழை
விடிந்த பின்பும் மழை
மறுகாலும் மதகுகளும்
இல்லாத இடத்தில்
தேங்கிய மழைநீர்
வடியாததைப் போல
இந்த மழைநேரத்துக் காலை
வேளையின்
சோம்பலும் முடிவதேயில்லை.

போர்வைக்குள் பதுங்கிக் கொண்டு
எவ்வளவு நேரம்
செல்லம் கொஞ்சினாலும்
மழை தாய்மடி போல
அரவணைத்துக் கொள்ளும்.

மழை நேரத்துச் சோம்பல்
தேநீர்க் கடை பாய்லர் முதல்
இருசக்கர வாகன எஞ்சின்
வரைக்கும்
எல்லாவற்றிலும் தொற்றிக்
கொள்கிறது.

வெயில் அப்படி அல்ல
அது சுள் எனச் சுடும்
தந்தையின் கோபம்
அது காயும் போது
சுறுசுறுப்பு தானாக வந்து விடும்.

ஐப்பசி மாதம்
அடைமழை என்பார்கள்
வெயில் அடித்தால் மழைக்கும்
மழை பொழிந்தால் வெயிலுக்கும்
பசித்துக் கிடக்கிறது மனசு.

—

**மு. ஆறுமுகவிக்னேஷ்,**
சத்திரப்பட்டி,
விருதுநகர் மாவட்டம்.

# கனக்கும் மனம்

*உனக்காக நான் எழுதிய*
*கவிதையை காற்றில் பறக்க விடுகிறாய்!*

*உனக்காக நான் வரைந்த ஓவியத்தை*
*அழித்துவிட்டு ரசிக்கிறாய்!*

*உனக்காக நான் இசைக்கும் பாடலை*
*முகாரி என்கிறாய்!*

*உனக்காக நான் எழுப்பிய கோட்டையை*
*சமாதி ஆக்கிவிட்டு புன்னகைக்கிறாய்!*

*உணர்வுகளை தூண்டி விட்டு அமில*
*வார்த்தைகளை உமிழ்கிறாய்!*

*தொடர் அலட்சியத்தால் தொடராமல்*
*போன எனது புன்னகையை செல்லரிக்க*
*விட்டு விட்டு கனத்த இதயத்துடன்*
*நிற்கையில் மீண்டும் வருகிறாய்!*
*புன்னகைக்கிறாய்!*
*இசைக்கிறாய்! இரசிக்கிறாய்!*

*நினைவலைகளில் சிக்கித் தவிக்கையில்*
*கைக் கொடுத்து உதவுகிறாய்!*

*என் மௌனத்தை என் அனுமதியின்றி*
*மொழிபெயர்க்க நினைக்கிறாய்!*

*என்   புகைப்படத்தில் ஒட்டியுள்ள*
*புன்னகையை மீட்டெடுக்க முயல்கிறாய்!*

*சேற்றில் சிக்கிய பறவையின் சிறகாய்*
*கனக்கும் மனதோடு தொடரும் மௌனம்*
*வெற்றி கொள்கிறது!*

*தொடர்ந்து தோற்கிறது புன்னகை*
*மட்டும் என்னுள்!*

—

*பெ. விஜயலட்சுமி,*
*காஞ்சிபுரம்.*
***6380704001***



# பதிலற்ற பொழுதுகளில்...

முடிவுக்கான
ஆலோசனைக்கான
உதவி கேட்புக்கான
பிறருக்கான வாய்ப்புக்கான
பதிலை
எதிர்மனிதரிடம்
எதிர்பார்த்திருக்கையில்

பதிலற்ற அமைதியும்
முக மொழியில்
அறிய முடியாமையும்
என்றால்

சரி என்கிறாரா
இல்லை என்பதை
வார்த்தைகள் இல்லாமல்
சொல்கிறாரா
யோசிக்கிறாரா
வேறு யாரிடமும்
ஆலோசிக்கப்போகிறாரா
முடியாது என்பதை
சொல்ல சங்கடப்படுகிறாரா

என நிறைய
கேள்விகள்

## பேரை சொல்லவா?...

உலகத்து நல்ல விஷயங்களும்
பிறரை பாராட்டும்
நிகழ்வுகளும்
பகிரப்பட்டால்
அது 'சந்தோஷ மன நிலை'

நாட்டின் அவலங்களும்
பிறரை குற்றம் சாட்டுதலும்
அரங்கேறினால்
அது 'வருத்த மன நிலை'

சந்தோஷமும்
நம்பிக்கையும்
சொல்லப்பட்டால்
அது 'வெற்றியின் வாசிப்பு'

புலம்பல்களும்
இயலாத தன்மையையும்
சொல்லப்பட்டால்
அது' இழந்த மன நிலை

## அதை விட...

மீண்டும்
மீண்டும்
முயற்சி செய்து
பெற்ற வெற்றியில்
கிடைத்த சந்தோஷத்தை விட

நீண்ட நாட்களாய்
நாளை நாளை
என்று எதிர்பார்த்த
பதட்ட நிமிடங்கள்
கடந்த கணத்திற்கு
பிறகு
கிடைக்கும் சந்தோஷத்தை விட

'அப்பாடா'

என்ற தன் திருப்தி
அதிகம்.

## அந்த நிலை வரும் வரையில்...

செல்வ சேமிப்பில்
போக வேண்டிய
தூரம் இருப்பினும்
கிடைத்தவற்றில் சந்தோஷமமும்
நாளையவற்றில்
நம்பிக்கை

முடிக்க வேண்டிய
பணிக்கு
நிறைய பயணம்
செய்ய வேண்டிய
இருப்பினும்
முடிந்தவற்றில்
தன் திருப்தியும்
செய்ய வேண்டியவற்றில்
ஆர்வம்

கஷ்டங்கள் தீர
பல நிலை கடக்க
வேண்டியவை இருப்பினும்
தீர்ந்த கஷ்டத்திற்கு
நிம்மதியும்
பாக்கி உள்ளவை
தீர செயல்பாடு

அந்த நிலை வரும்
வரையில்
மனதுக்குள்
தொண தொணப்பு
இருந்து கொண்டே
தான் இருக்கும்.

## ஞாபக சேமிப்பிலிருந்து...

சிறு வயதில்
பொழுது போக்குக்கு
திரைப்படமே
பெரும் பங்கு வகித்த
நாட்களில்

படம் பார்ப்பதற்கு
முன்பு அதை பற்றிய
கற்பனை

நண்பர்களுடன்
சேர்ந்து சென்ற
சந்தோஷம்

திரையரங்கில்
ஏற்கனவே உள்ள
நண்பர்களுடன்
சேர்ந்து கொண்ட
பிற நண்பர்களுடன்
அரட்டை

கொஞ்சம் வளர்ந்த பின்
புத்தி யோசிக்க ஆரம்பித்த பின்
திரை காட்சிகளுக்கான
வசனத்தை முன் கூட்டி
சொல்லி
நம்மை நாமே
சபாசு சொல்லிக்கொண்ட
தருணங்கள்

அடுத்த கட்டமாய்
தர்க்க ரீதியாய்

காட்சிகள் கோர்வையாய்
வரவில்லை
வசனத்தில் இன்னும்
வலு சேர்த்திருக்கலாம்
முடிவு வேறு விதமாய்
இருந்திருக்கலாம்
என திரை விமர்சனகாய்

அது ஒரு சந்தை
அங்கு உள்ள தேவைக்கு
தான் தயாரிப்பு
அதற்குத்தான் வியாபாரம்
என்பது புரியாமால்

பின் ஒரு கட்டத்தில்
மனததோடு ஒட்டா
படம் எனில்
பாதிலியே
திரையரங்கம் விட்டு
வெளியேறல்

தற்போது
இரண்டு மணி நேரம்
பார்க்க பொறுமை
இல்லாமை
இணைய வழி
பொழுது போக்கு
என்று ஆகி விட்டதால்
திரைப்படம்
பார்த்தே
பல ஆண்டுகள்
ஆகி விட்டது

## அதனாலே

அந்த விஷயம்
பற்றி தெளிவாய்
சொல்கிறார்

இது தவறு என்பதை
சரியாய் சொல்கிறார்

அதை எல்லோருக்கும்
புரியும்படி
யதார்த்தமாய்
பேசுகிறார்

என்று இரவல் வார்த்தைகளை
பாராட்டுவதற்கு
காரணங்களாய்

நாம் நினைத்தை
சொல்ல வந்ததை
அப்படியே
சொல்வதால்

அறிந்தாலும்
அதற்கான
வார்த்தைகளும்
சொல்லும் விதமும்
தெரியாததால்

அதை பற்றிய
இது வரை அறியாதிருப்பதாலும்
உள்ளம் தொட்டதாலும்......

—

*A. S. சுந்தரராஜன்,*
தொடர்பு இலக்கம்: +91 9994920236

# நட்பே சுவாசம் (சிறுகதை)

பொருண்மை: இன்ப அதிர்ச்சி.

"மச்சான்... குமாரு, நான் துபாய்ல இருந்து முருகன் பேசுறேன், நீ நல்லாயிருக்கியா ? இன்னும் ஒரு வாரத்துல இந்தியாவுக்கு வர்றேன் டா!"

"டேய்... முருகா, நீ நல்லா இருக்கியாடா? ஏன்டா, இரண்டு மாசமா எங்கிட்ட பேசவே இல்ல?"

"குமாரு, உங்கிட்ட பேசாம வேற யாரிடத்தில நான் பேச போர்றேன் டா."

"ரெண்டு மாசமா, துபாய்ல பாலைவனப் பகுதியில எனக்கு கொஞ்சம் அதிகமான வேலை. அதுதான்டா பேச முடியல."

"நீ, நல்லபடியா ஊருக்கு வந்து சேரு,சரியா!"

"குமாரு, நான் வர்றது யாருக்கும் தெரிய வேண்டாம்.எல்லாத்துக்கும் இன்ப அதிர்ச்சி கொடுக்கலாம்."

"இதுவேறையாடா! சரி..சரி.. வா.. டா."

சொன்னபடியே ஒரு வாரம் கழிந்தது. முருகனை அழைத்து வர வேண்டியே மதுரை விமான நிலையம் சென்றான் குமார். நண்பனைச் சந்தித்து மிகுந்த மகிழ்ச்சியடைந்து வாடிபட்டியில் உள்ள அவனது வீட்டிற்கு அழைத்துச் சென்றான் குமார். அங்கே அவனுக்கு மிகப்பெரிய ஆச்சரியம்! ஒன்று காத்துக் கிடந்தது.

தனது பிள்ளையை சந்தித்த பெற்றோருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. "அம்மா, அப்பா, நான் நம்ம வீட்டுக்கு வந்துவிட்டேன். இனி உங்களை விட்டு நான் எப்போதுமே பிரியமாட்டேன்" என்று முருகன் உறுதியளித்தான். சற்று தன் தாயின் கண்களை உற்றுப் பார்த்ததில், தனது சிறுவயதில் விபத்தில் ஒரு கண்ணின் பார்வையை இழந்த தனது தாயின் கண்ணில், தற்போது பார்வை மிளிர்கிறது.

" குமாரு, என்னடா எனக்கு எதுவுமே சொல்லலையே" என்று கேட்க..

"அந்தக் கதையை நான் உனக்கு சொல்லுறேன் பா முருகா. உன் நண்பனை நினைச்சு நான் ரொம்பவும் பெருமை படுகிறேன். அவனோட உறவினர் ஒருவர் விபத்தில் இறந்து விட்டார். அவர் முன்பே கண் தானம் செய்ததை அறிந்திருந்த குமார், அவர்களின் உறவினரிடம் மன்றாடி, உனது தாயிற்கு ஒரு கண்ணைக் கடவுளின் உதவியோட திரும்பவும் கொடுத்துள்ளான்.

அவனே நட்பின் இலக்கணம்.அதுமட்டுமின்றி இந்த நிகழ்வைப் பற்றி உன்னிடம் நீ வரும் வரையில் எதுவும் தெரியக் கூடாது என்றும் எங்களிடம் சத்தியம் செய்யச் சொல்லி வற்புறுத்தியும் விட்டான். உனக்கு இன்ப அதிர்ச்சி தருவதற்காக." என்று முருகனின் தந்தை சொல்லி ஆனந்தக் கண்ணீரோடு குமாரைப் பெருமைப் படுத்தினார்.

"மச்சான்.. குமாரு, என் உசுருக்கு மேல நீதான் டா.! அடுத்த பிறவியென்று ஒன்று இருந்தா, நீ தான் என் நண்பனா வரணும்னு ஆண்டவன வேண்டிக்கிட்டே இருப்பேன்."

முற்றும்.

—

சா. நாகூர் பிச்சை,
திண்டுக்கல்.



# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.